எழுத்தறி வித்தவன் இறைவனாகும் எனும் வெற்றி வேற்கைக்குப் பொருத்தமான சூழலுக்கு (√) என அடையாளமிடுக.

1. மணி மிகவும் பண்பான மாணவன். அவன் தன்னுடைய ஆசிரியரைக் கடவுளுக்குச் சமமாகக் கருதி மதிப்பும் மரியாதையும் கொடுப்பான். (   )

2. சிவா தன் பெற்றோர் பேச்சைத் தட்டாதவன். அவன் தன் பெற்றோர் கூறும் ஆலோசனைகளைப் பின்பற்றி நடப்பான். (   )

3. சீலன் கணிதப் பாடத்தில் மிகவும் பின்தங்கி இருந்தான். அவன் தன் ஆசிரியரின் வழிகாட்டலினால் அப்பாடத்தில் சிறந்த தேர்ச்சியை அடைந்தான். ஆசிரியரின் சேவையைப் பாராட்டி, பரிசு வழங்கினான். ஆசிரியரை மனத்தில் வைத்துப் போற்றினான். (   )

4. மாலா ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவள். ஆசிரியை திருமதி கோதை மாலாவுக்கு மிகவும் பக்கபலமாக இருந்தார். அவளுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வந்தார். மாலாவும் தேர்வில் சிறந்த புள்ளிகளைப் பெற்று ஆசிரியருக்கு நற்பெயரை ஈட்டித் தந்தாள். இன்றுவரை ஆசிரியரை வணங்கி வருகிறாள். (   )

5. நாட்டில் புகழ்பெற்ற மருத்துவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள் யாழினி. தன்னுடைய வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருந்த ஆசிரியரை எப்பொழுதும் மனத்தில் நினைத்துக் கொள்வாள். ஆசிரியர் என்றும் நலமுடன் இருக்க இறைவனை வேண்டிக் கொள்வாள். (   )

6. மாறன் கெட்டிக்கார மாணவன். அவன் ஆசிரியரின் பேச்சை ஒருபோதும் கேட்க மாட்டான். அதனால், அவன் பலரின் ஏச்சுப் பேச்சுக்கு ஆளானான். (   )

LIVEWORKSHEETS